## தமிழ்நாடு பட்ஜெட் (2023 – 24)

1. **பள்ளிக்கல்வித்துறை:**
   - ஒதுக்கீடு - ரூ.40,299 கோடி.
   - எண்ணும் எழுத்தும் திட்டம் 4 (ம) 5 ம் வகுப்பு மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்படும் (ரூ.110 கோடி).
   - மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை எளிதில் கிடைக்க தனி இணையதளம் தொடங்கப்படும்.
2. **அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள்:**
   - மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் நோக்கில் 54 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் ரூ.2783 கோடி மதிப்பீட்டில் திறன் மையங்களாக தரம் உயர்த்தப்படும்.
   - தொழில்துறையினருடன் இணைந்து தொழில்துறை 4.0 தரத்துக்கு ஏற்ப அரசு தொழில்நுட்ப கல்லூரிகளை திறன் மிகு மையங்களாக மாற்றத்திட்டம்.
   - திட்டத்தின் குறிக்கோள் : கல்வி நிறுவனங்களில் கட்டமைப்பை மேம்படுத்துதல், தொழில்சார் பாடத்திட்டங்களை உருவாக்குதல், ஆசிரியர்களின் திறன் மேம்பாடு, மாணவர்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.
   - திறன் பயிற்சிமையம் : IIT (ம) பாலிடெக்னிக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த திறன் பயிற்சி அளிக்கவும் திறமையான பணியாளர்களை உருவாக்கவும் ரூ.120 கோடி செலவில் சென்னை அம்பத்தூரில் தமிழ்நாடு உலகளாவிய புதுமைகள் (ம) திறன் பயிற்சி மையம் அமைக்கப்படும்.
   - இம்மையத்தில் இயந்திர மின்னனுவியல், இணையவழி செயல்பாடு, அதிநவீன வாகனத்தொழில்நுட்பம், துல்லியப் பொறியியல் (ம) உயர்தர வெல்டிங் போன்ற தொழிற்நுட்பங்களுக்கான பயிற்சிகள் அளிக்கப்படும்.
   - தொழிற்சாலைகளில் திறன் பள்ளிகள் என்ற திட்டத்துக்காக ரூ.25 கோடி ஒதுக்கீடு (Jactory Skill Schools) .
   - சூளகிரி சிப்காட் தொழில் பூங்காவில் ரூ.80 கோடியில் அதி நவீன திறன் மேம்பாட்டு மையம் நிறுவப்படும்.
3. **தொழில் பூங்காக்கள்:**
   - நிதி ஒதுக்கீடு - ரூ.410 கோடி.
   - இடம் : விருதுநகர், வேலூர், கள்ளக்குறிச்சி, கோவை.
   - நோக்கம் : தொழில்துறையில் அதிக முதலீடுகளை ஈர்த்தல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.

WINNER CHOICE IAS ACADEMY

- தோல் அல்லாத காலணிகள் உற்பத்தி துறையில் மேலும் முதலீடுகளை ஊக்குவிக்க இதற்கென தனிக்கொள்கை வெளியிடப்பட்டதுடன் தைவான் காலணி உற்பத்தியாளர்கள் சங்கத்துடன் தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் கையொப்பமிட்டுள்ளது.
- புதிய தொழில்பூங்காக்கள் உருவாக்கத்தினால் 22,000 பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.
- கங்கை கொண்டானில் உள்ள சிப்காட் தொழிற்பேட்டையில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் 1500 பணியாளர்கள் தங்கும் வசதிகளுடன் தொழிலாளர் குடியிருப்புகள் ஏற்படுத்தப்படும்.

4. **சிம்பிள் கவ் (Simple Gov)**

**நோக்கம் :**

- மின்னனு முறையில் எளிதாக, வெளிப்படையாக அனைத்து சேவைகளையும் மக்களுக்கு வழங்குதல்.
- மென்பொருள்களை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் உரிய தரநிலைகளுடன் உருவாக்குவதற்காக ரூ.100 கோடி மதிப்பில் மின் ஆளுகை நிதி உருவாக்கப்படும். இந்நிதி அரசுத் துறைகளால் மேற்கொள்ளப்படும் மின் ஆளுகை முயற்சிகளுக்கு பயன்படுத்தப்படும்.
- ரூ.400 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த மின்னணு கட்டமைப்பு அமைக்கப்படும். இதன் மூலம் மாநில தலைமையத்திலிருந்து அனைத்து மாவட்டங்களுக்கும் அதிவேக கண்ணாடி இழைக்கற்றை வலையமைப்பு (ஆப்டிக்கல்.்.பைபர் நெட்வொர்க்) உருவாக்கப்படும்.
- இலவச வை.்.பை சேவை : சென்னை, தாம்பரம், ஆவடி, கோவை, மதுரை, திருச்சி, சேலம் மாநகராட்சிகள்.
- தமிழ்நாடு தொழில்நுட்ப நகரங்கள் அமைத்தல்: சென்னை, கோவை, ஓசூர்.
- நியோ டைடல் பூங்காக்கள் : 7 மாவட்டங்களில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் நீட்சியாக ஈரோடு, நெல்லை, செங்கல்பட்டில் தலா ரூ.1 லட்சம் சதுர அடி கட்டிடப்பரப்பில் தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் அமைக்கப்படும்.
- இதன் மூலம் சுமார் 4000 பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

5. **சுற்றலா மேம்பாடு:**

- சுற்றுலாத் தலங்களின் கட்டமைப்பு மேம்பாட்டுக்காக ரூ.75 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல்.
- பிச்சாவரம், பூம்புகார் (ம) ஒகேனக்கல் ஆகிய சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதற்கான திட்டங்களுக்கு ரூ.55 கோடி மதிப்பீடு.
- சுற்றுலாக் கொள்கை வகுக்க திட்டம்.

WINNER CHOICE IAS ACADEMY

6. **நெய்தல் மீட்சி இயக்கம் திட்டம்:**
    - கடல் மாசுபாட்டைக் குறைத்து, அதன் சூழலைப் பாதுகாத்தல்.
    - ரூ.2000 கோடி நிதி ஒதுக்கீடு.
    - நோக்கம் : கடல் அரிக்பைத் தடுத்தல், கடல்மாசுபாட்டைக் குறைத்தல், கடல்சார் உயிரியல் பன்முகத் தன்மையைப் பாதுகாத்தல்.
    - உலகவங்கி நிதியுதவியுடன் அடுத்த 5 ஆண்டுகளில் செயல்படுத்த திட்டம்.
7. **உலக முதலீட்டாளர்கள் மாநாடு:**
    - சென்னை, 2024 ஜனவரியில் நடத்த திட்டம்.
    - நிதி ஒதுக்கீடு ரூ.100 கோடி.
    - தமிழ்நாடு கடந்த 2 ஆண்டுகளில் தொழில்துறையில் அதிக அளவிலான முதலீடுகளை ஈர்த்து வருகிறது. இந்த முதலீடுகளின் பலன்களை ஒருங்கிணைத்து வரும் 2030-ம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை நோக்கி பயணிக்க இம்மாநாடு நடத்தபட உள்ளது.
    - மாநிலத்தில் உள்ள பெருந்தொழில்கள், சிறுதொழில் நிறுவனங்கள், புதுமைத் தொழில்கள் ஆகியவற்றை முதலீட்டாளர்களுடனும் உலகச் சந்தையுடனும் இணைக்க வாய்ப்பாக அமையும்.
8. **உலகளாவிய விளையாட்டு நகரம் :**
    - சென்னையில் அமைக்கத்திட்டம்.
    - சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் அமைக்கத்திட்டம்.
    - ரூ.25 கோடி மதிப்பீட்டில் நவீன விளையாட்டு வசதிகளுடன் சென்னை நேரு திறந்தவெளி விளையாட்டு அரங்கத்தை சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.
9. **தஞ்சை சோழர் அருங்காட்சியம்:**
    - சோழர்களின் நினைவுச் சின்னங்களை பாதுகாக்க அருங்காட்சியகம் அமைப்பு.
10. **நினைவிடம்:**
    - சென்னை
    - தாய் தமிழைக் காக்க, இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் உயிர்நீத்த மொழிப்போர் தியாகிகளான தாளமுத்து, நடராஜன் ஆகியோரின் பங்களிப்பை போற்றும் வகையில் நினைவிடம் அமைத்தல்.
11. **மொழி பெயர்ப்பு:**
    - அம்பேத்கரின் சிந்தனைகளை பரப்புவதற்காக அவரது படைப்புகள் தமிழின் மொழி பெயர்க்கப்படும்.
    - அரசு மானியம் ரூ.5 கோடி வழங்கப்படும்.

WINNER CHOICE IAS ACADEMY

**12. தமிழ்க்கணினி பன்னாட்டு மாநாடு:**

- தொழில்நுட்பத்துறையில் தமிழ்மொழியினி பயன்பாட்டை அதிகரிப்பதன் மூலம் தமிழ்மொழி உலகமொழியாக வளர்வதற்கு புகழ்பெற்ற வல்லுநர்களை கொண்டு இம்மாநாடு நடத்தப்படும்.
- தமிழ்மொழியில் பெருமளவில் மென் பொருள்கள் உருவாக்கப்படுவதை இது ஊக்குவிக்கும்.

**13. சங்கமம் கலை விழா:**

- சென்னையில் நடத்தப்பட்டு வரும் கலைவிழா மேலும் 8 நகரங்களுக்கு விரிவாக்கம்.
- நிதி ஒதுக்கீடு ரூ.11கோடி.
- நாட்டுப்புறக் கலைகளையும் கலைஞர்களையும் பேணி வளர்ப்பதற்கும் தமிழ் மக்களின் பண்பாட்டு விழுமியங்களின் பகிர்வினை கொண்டாடுவதற்கும் நல்வாய்ப்புகளை இந்த விழாக்கள் ஏற்படுத்தும்.

**14. நாட்டுப்புற கலைப் பயிற்சி மையங்கள்:**

- நாட்டுப்புறக் கலைகளை பாதுகாக்கவும் இந்த பண்பாடு தொடர்ந்து வருங்காலங்களிலும் செழித்தோங்கவும் தமிழகம் முழுவதும் 25 பகுதி நேர நாட்டுப்புற கலைப்பயிற்சி மையங்கள் அமைக்கப்படும்.

**15. குடிமைப்பணித்தேர்வு – ஊக்கத்தொகை:**

- குடிமைப்பணிகள் தேர்வு மாணவர்களுக்கு மேம்பட்ட பயிற்சி (ம) பயிற்சி பொருள்கள் வழங்கும் திட்டத்தை அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியுடன் இணைந்து தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் செயல்படுத்தும்.
- ஒவ்வொரு ஆண்டும் மதிப்பீட்டுத் தேர்வு மூலம் 1000 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு முதல்நிலைத் தேர்வுக்கு தயாராவதற்காக மாதத்துக்கு ரூ.7500 வீதம் 10 மாதங்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும்.
- முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெறுவோருக்கு ரூ.25000 ஊக்கத் தொகையாக வழங்கப்படும்.
- நிதி ஒதுக்கீடு - ரூ.10 கோடி.

**16. காலை உணவு திட்ட விரிவாக்கம்:**

- ஒதுக்கீடு ரூ.500 கோடி.
- 30,122 தொடக்கப் பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்படும்.
- 2022ல் மதுரையில் தொடக்கம் - 1937 பள்ளிகளில் 1 முதல் 5 ம் வகுப்பு மாணவர்கள்.
- பயன் : தொடக்கப்பள்ளி மாணவர்களின் வருகை அதிகரிப்பு.

**17. 15 புதிய நீரேற்று மின்திட்டங்கள்:**

- ரூ.77,000 கோடி ஒதுக்கீடு.

WINNER CHOICE IAS ACADEMY

- 2030 ம் ஆண்டுக்குள் 14,500 மெகாவாட் திறன் கொண்ட 15 புதிய நீரேற்று மின்திட்டங்கள் அரசு – தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும்.

**18. மறுவாழ்வு முகாம்களில் வீடுகட்டுதல்:**

- இலங்கைத் தமிழர்களுக்காக மறுவாழ்வு முகாம்களில் 2-ம் கட்டமாக 3959 வீடுகள் கட்ட ரூ223 கோடி ஒதுக்கீடு.
- முதல் கட்டம் - 3510 வீடுகள், ரூ.176 கோடி.
- மொத்த வீடுகள் - 7469.

**19. கலைஞர் நூற்றாண்டு நூலகம்:**

- மதுரையில் 2 லட்சம் ச.அடி பரப்பளவில் 8 தளங்கள், நவீன வசதிகளைக் கொண்டது. ஜூனில் திறப்பு.
- நூல்கள் : குழந்தைகள், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், போட்டித் தேர்வு எழுதும் இளைஞர்கள், இல்லத்தரசிகள், மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் என அணைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

  **சிறப்பம்சங்கள்:**

  1. குழந்தைகளைக் கவரும் வண்ணமயமான நூலகசூழல்.
  2. போட்டித் தேர்வு மாணவர்களுக்கான இணைய வசதியுடன் கூடிய சிறப்புப் பிரிவு, 3 பார்வை திறன் குறைந்த வாசகர்களுக்காக பிரெய்லி வகை நூல்கள், 4 குளிர் சாதன வசதி கொண்ட கூட்ட அரங்குகள், 5 தென் தமிழகத்தின் பண்பாட்டை பறைசாற்றும் வகையில் கலை அரங்கம் (ம) கருணாநிதியின் படைப்புகள், பேச்சுகள் இடம்பெறும் வகையில் எழிலர்ந்த கூடம் முதற்கட்டமாக 3.50 லட்சம் நூல்கள் இடம் பெறும்.

**20. மெட்ரோ ரயில் சேவை:**

- நிதி ஒதுக்கீடு ரூ.17500 கோடி
- இடம் : கோவை, மதுரை
- கோவை – அவிநாசிசாலை – சத்தியமங்கலம் சாலை இணைப்பு ரூ.9000கோடி)

  மதுரை – திருமங்கலம் - ஒத்தக்கடை (ரூ.8500 கோடி)

**21. தந்தை பெரியார் வனவிலங்கு சரணாலயம்:**

- இடம் - ஈரோடு, 80567 ஹெக்டேர் பரப்பு.
- தமிழகத்தின் 18 வது வனவிலங்கு சரணாலயம் இது.
- நீலகிரி உயிர்க்கோள காப்பகத்தை தென்காவிரி வனவிலங்கு சரணாயத்துடன் இணைக்கும் வகையில் இந்த சரணாலயம் அமைக்கப்பட்டுள்ளது.

**22. பன்னாட்டு பறவை மையம் :**

- மரக்காணம், ஒதுக்கீடு ரூ.25 கோடி.

WINNER CHOICE IAS ACADEMY

- மத்திய ஆசியாவின் பறவைகள் வலசைப் பாதையில் தமிழகம் அமைந்துள்ளதால் ஒவ்வொரு ஆண்டும் பெரும் எண்ணிக்கையில் பறவைகள் நமது மாநிலத்துக்கு வருகை தருகின்றன.
- பறவைகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் பறவையியல் ஆராய்ச்சியை ஊக்குவிக்கவும், இயற்கையில் பறவைகளின் பங்கைப் பற்றிய வழிப்புணர்வை ஏற்படுத்தவும் அமைக்கப்பட உள்ளது.

**23. குடும்பத் தலைவிகளுக்கு உரிமைத்தொகை:**

- ரூ.1000 மாதந்தோறும் வழங்குதல்.
- தொடக்கம் : செப்டம்பர் 15, 2023 (அண்ணா பிறந்த தினம்)
- நிதி ஒதுக்கீடு ரூ.700 கோடி.

**1ரூபாயில் அரசின் வரவு – செலவு**

100 காசு (வரவு) (ரூ)

| | | |
|---|---|---|
| 44 காசு | - | சொந்த வரி வருவாய் |
| 33 காசு | - | பொதுக்கடன் |
| 10 காசு | - | மத்திய வரிகளின் பங்கு |
| 7 காசு | - | மத்திய அரசின் உதவிமானியங்கள் |
| 5 காசு | - | மாநிலத்தின் சொந்த வரியல்லாத வருவாய். |
| 1 காசு | - | கடன்களின் வசூல் |

**100 காசு ( 1ரூ) (செலவு)**

| | | |
|---|---|---|
| 30 காசு | - | உதவித்தொகைகள் - மானியங்கள் |
| 19 காசு | - | சம்பளம் |
| 13 காசு | - | வட்டி செலுத்துதல் |
| 11 காசு | - | மூலதன செலவு |
| 11 காசு | - | கடன்கள் திருப்பி செலுத்துதல் |
| 9 காசு | - | ஓய்வூதியம் |
| 4 காசு | - | செயல்பாடுகள் - பராமரிப்புகள் |
| 3 காசு | - | கடன் வழங்குதல். |

**24. மக்களைத்தேடி மருத்துவம் திட்டம்:**

- இத்திட்டம் தொழிற்சாலைகளில் உள்ள 8.35 லட்சம் தொழிலாளர்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.
- உயர் ரத்த அழுத்தம், சர்க்கரை நோய் போன்ற தொற்றா நோய்களுக்கு முக்கியத்துவம் அளித்து இந்த மருத்துவ முகாம்கள் நடத்தப்படும். இத்திட்டத்தில் புலம்பெயர் தொழிலாளர்களும் இடம்பெறுவர்.

WINNER CHOICE IAS ACADEMY